1981 மார்ச் 5]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1978-79-ல் துவங்கப்பட்ட 32 அரசு உயர் நிலைப் பள்ளிகளுக்கு 30—4—1980-ல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு துவக்கப்பட்ட பள்ளிகளுக்கு இன்னும், அனுமதிக்கப்படவில்லை. பள்ளிகளைத் துவக்கும்போதே அந்தப் பணியிடங்கள் அனுமதிக்கப்படும் என்ற கருத்து பரிசிலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் அந்த முறையிலே காணலாம்.

இன்டக்டட் ஆசிரியர்களின் சிறப்பூதியம்.

* 115. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இன்டக்டட் ஆசிரியர்களின் சிறப்பூதியத்தை ரூ 25 லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

(முற்பகல் 10-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தொழிற் பிரிவு (மெக்கானிக்) ஆசிரியர்கள் 25 பாட வேளைகளை எடுத்த போதிலும், அவர்களுக்குச் சிறப்பு ஊதியமான ரூ. 25 வழங்கப்படாதிருப்பதை அரசு அறியுமா ? எனவே வருங்காலத்திலாவது அதை அவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அவர்களுக்கான சிறப்பு ஊதியத்தை உயர்த்தாவிட்டாலும்கூட, அத்தகைய ஆசிரியர்கள் தங்களின் படிப்புத் தகுதியை உயர்த்திக்கொள்ள—அதாவது மேற்படிப்புக்குத் தங்களைத் தயார் செய்து கொள்ள—அரசு உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதே ஆசிரியர்கள் எம்.ஏ. போன்ற பட்டங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. அதை ஆசிரியர்களும் அதிகமான அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் சயன்ஸ் பாடங்களில் எம்.எஸ்ஸி பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் கடினமாக இருப்பதால், அதற்கான வகையில் சிறப்பு

நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதன்படி அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை இருந்தபோது பணியாற்றிய அதே அமைச்சுப் பணியாளர்கள்தான் இப்போது 12 ஆம் வகுப்புவரையுள்ள மேல் நிலைப் பள்ளிகளில் கூடுதல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஆசிரியர்களுக்குக் கொடுக்கப் படும் இந்தச் சிறப்பு ஊதியத்தை அமைச்சுப் பணியாளர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 10 ஆம் வகுப்பு வரை பாடம் கற்பித்து வந்த ஆசிரியர்கள், 11 ஆம் வகுப்பிற்கும் சொல்லிக் கொடுப்பதால் உண்டாகிற சிரமத்திற்காகத்தான் ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் கொடுக் கப்படுகிறது. ஆனால் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் இதன் காரணமாக அதிகமான வேலை செய்கிறார்கள் என்ற அடிப்படையில் இங்கே அவர்களுக்கும் சிறப்பு ஊதியம் கேட்கப்படுகிறது. அதை அரசு வேறு வகையில் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கிய பிறகு, 10 ஆம் வகுப்பு வரை கற்பித்து வந்த ஆசிரியர்கள் 12 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, அத்தகைய " இன்டக்டட் ஆசிரியர் களுக்கு " சிறப்பூதியமாக ரூ. 25 வழங்கி வருகிறோம். 12 ஆம் வகுப்பு வரை கற்பிப்பதற்கு, புதிய பாடங்களைப் படித்து, டிரெயினிங்கும் போய் கற்பிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சிறப்பூதியமாக ரூபாய் 25 மட்டும் வழங்கப்படுவது போதுமானது என்று அரசு கருதுகிறதா ? அத்தகைய ஆசிரியர்கள் செய்யும் பணியின் அடிப்படையில் அந்தச் சிறப்பூதியத் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா ? அல்லது அட்ஹாக் ரூல்சை முடிவுக்குக் கொண்டு வந்து விதிமுறைகளை ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இத்தகைய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சிறப்பூதியம்—அதாவது ரூபாய் 25—குறைவாகப் பட்டாலும், இதில் உள்ள வேறொரு நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவர்கள் அனைவரும் எப்போதும் இன்டக்டட் டீச்சர்களாகவே இருக்க வேண்டும், வெறும் பி.ஏ. பி.எஸ்சி. படித்தவர்களாக இருக்க வேண்டும் என்று அரசு விரும்பவில்லை. நாளடைவில் அவர்களும் எம்.ஏ.. எம்.எஸ்சி. பட்டம் பெற்றவர்களாக மாற வேண்டும் என்றுதான் அரசு விரும்புகிறது.

1981 மார்ச் 5]

எனவே வழங்கப்படும் சிறப்பூதியம் என்பது ஆசிரியர்கள் மேற்கொண்டும் படித்துப் பட்டம் பெறுவதற்குத் தூண்டுகோலாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, படிக்காமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக அமையக் கூடாது. இப்போது கிடைக்கிற சம்பளமே பரவாயில்லை என்று ஆசிரியர்கள் நினைத்துக்கொண்டு, மேற்கொண்டு பட்டப் படிப்பிற்குத் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளாமல் இருந்து விடுவதற்கு இது உதவக் கூடாது. தங்களின் தகுதியை மேற்கொண்டும் உயர்த்திக் கொள்ளாமல் இருப்பதற்கு இது உதவியாக இருக்கக்கூடாது. எனவே தகுதி பெற்ற ஆசிரியர்களை வெளியிலிருந்து கொண்டு வந்து இப்போது பணியாற்றும் ஆசிரியர்களை அந்தப் பதவிகளிலிருந்து இறக்க வேண்டும் என்று அரசு விரும்ப வில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : தொழிற் பாடப் பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 24 பாட வேளைகள் கற் பித்தால் மட்டுமே அவர்களுக்கு ரூபாய் 25 சிறப்பூதியமாக வழங்கப்படும் நிலை இருக்கிறது. ஆனால் வேறு சில பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர் களைப் பொறுத்தவரையில், 10 அல்லது 12 பாட வேளைகள் இருந்தால்கூட, இத்தகைய சிறப்பூதியம் பெறும் நிலை இருக்கிறது. எனவே தொழிற் பாடப் பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 16 பாட வேளைகள் எடுத்தால் போதும், அவர்களுக்குச் சிறப்பூதியமான ரூபாய் 25 வழங்கப்படும் என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இரண்டு நாட்களுக்கு முன் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பதிலளிக்கும்போது தரப்பட்ட விவர அறிக்கை யில், மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள இன்டக்டட் ஆசிரியர்களுக்கு வழங்கப் படும் சிறப்பூதியத்தை உயர்த்துவது குறித்த பிரச்சினை அரசின் பரிசீலனை யில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். இந்த இரண் டில் எதைச் சரி என்று எடுத்துக் கொள்வது ? இது குறித்து அமைச்சர் அவர் கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒருவேளை அது பரிசீலனைக் கும், செயற்குறிப்புக்கும் இடையே இருக்கிற வித்தியாசமாக இருக்கலாம்.